சோற்றுடன் உண்ணப்படும் மரக்கறி வகைகள்: த காடின்ஸ் சஞ்சிகை சிங்கப்பூர் x iv *1. 17—29*

சந்திரசேன, ஜே. பி. சி. (1935)
இலங்கை, இந்திய மருந்து மூலிகைகளின் இரசாயன, மருந்தியல்: கரிசன் அண்ட குரொசுபீல்டு அச்சகம் கொழும்பு

சொப்பிரா, ஆ. என், நாயர் எஸ். எல்; சொப்பிரா ஜே. சி. (1956)
இந்திய மருந்து மூலிகைகளின் சொற்றொ தி: சி. எஸ். ஐ. ஆர். புதுடெல்கி

தசுத்தூர் ஜே. எப் (—)
இந்தியா, பாக்கிஸ்தான் நாடுகளின் பயனுள்ள தாவரங்கள் தரப்போரவல, சன்ஸ் அன்ட் கோ, பம்பாய்

உடுத்தி ஜே. எப். (1893)
வ. மே. மாகாணங்களதும் அவுத்தினதும் வயல், தோட்டப் பயிர்கள்: தொகுதி i—iii உருக்கி

லூவிஸ், எப். (1934)
இலங்கை மரக்கறித் தாவர உற்பத்திப் பொருள்கள்: லேக் கவுஸ், கொழும்பு

மாக் மில்லன் ஏச். எவ். (1943)
அயனமண்டல மரநடுகையும் தோட்டச் செய்கையும்: மாக்மில்லன், இலண்டன்

நெல் ஏ (•)
இலங்கையிலுள்ள, இலங்கைக்கான வண்ணத் தாவரங்கள் தாவரவியல் நூல் நிலைய M.S.S. பிரதி இலங்கைப் பல்கலைக் கழகம், கொழும்பு

ஓச்சே, ஜே. ஜே. (1931)
ருடச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளின் மரக் கறித் தாவரங்கள், துருக்கேஜி, பியுத்தன்சோக், யாவா.

பெரேரா, எஸ். பி. (1954)
இலங்கைக் காடுகளின் உண்ணத்தரு பழங்கள் பேறெஸ்தர் I iv: *141—149*

பிரி, என். டபிள்யு: (1971)
இலைப் புரதங்கள்; பிளாக்வெல்சு, ஒக்சுபோட்

பிரி ஜி. எஸ். (1962)
இந்தியக் காட்டுப் பூச்சியியல் தொகுதி 2. ப. 658 ஒக்சுபோட் புத்தகக் கம்பனி, புது டெல்கி

புர்சிக்குளோவ், ஜே. டபிளயு. (1968)
அயனமண்டலப் பயிர்கள்—இருவித்திலைத் தாவரங்கள் தொகுதி i-ii லொங்மன்ஸ், இலண்டன்

புர்சிச்குளோவ், ஜெ. டபிள்யு (1972)
அயனயமண்டலப் பயிர்கள்—ஒருவித்திலைத் தாவரங்கள் தொகுதிகள் i,-ii லொங்மன்ஸ் இலண்டன்

றொபேட்ஸ், ஈ. (1931)
இலங்கை, இந்திய மரக்கறித்தாவர மற்றீரியா மெடிக்கா, பீளேற் லிமிட்டட், கொழும்பு.

திரிமென், ஏச், (1893-1900)
இலங்கைத் தாவரவினக் கைந்நூல் தொகுதி i—V தலவு அன்ட் கோ, இலண்டன்.

VIDUT 4 - 2/3 - 19

இலங்கையின் நிலநீர் வளங்கள்

சி. இராமநாதன்
நீர்வள சபையின் சிரேட்ட எச்திரி/
நீர்புவிச்சரிதவியலர்

இலங்கையின் நீர்வள நிரப்பலின் பிரதான மூலம் நேர்முக மழைவீழ்ச்சியாகும். மழை பிரதானமாக மகா போகத்தில் ஒக்ரோபர், சனவரி மாதங்களுக்கிடையிற் பெய்கிறது. 25,330 சதுர மைல் பரப்பைக் கொண்ட இந்நாட்டில் ஆண்டுதோறும் சராசரியாக 75 அங்குல மழை பெய்கிறது. வடிகால்கள் ஆறுகள், அருவிகளின் மொத்த ஆண்டுக் கழுவுநீர் 4 கோடியே 16 இலட்சம் ஏக்கர் அடி மட்டுமாகும். உலர் வலயத்தில் அருவிகளில் சென்றடையும் கழுவுநீர் படிவு வீழ்ச்சியின் 10% க்கும் 50% க்கும் இடையில் வேறுபடுகிறது; ஈர வலயத்தில் அது 65% ஆகும். ஆவியாகப்—ஆவியுயிர்ப்பு மூலம் சிறு நூற்றுவீதம் இழக்கப்படுதற்கு இடமிருந்தாலும் ஏஞ்சியநீர் நிலத்தினுட் சென்று நில நீராகத் தங்குகிறது.

நாட்டில் நிலநீரைப் பயன்படுத்துவதற்கென முறைமையான,விஞ்ஞான ரீதியில் அமைந்த ஆய்வுகளை நீர்ப்பாசனத் திணைக்களம், நீர் வள சபை போன்ற அரசாங்க நிறுவனங்கள் கடந்த 15 வருடங்களாக மேற்கொண்டு வருகின்றன. இப்போது அந் நிறுவனங்களிடம் இருந்து பெறுமதிமிக்க தகவல்கள் உள்ளன.

நாட்டின் வெவ்வேறு பகுதிகளின் கிடைக்கப் பெறும் நிலநீரின் அளவு புவிச்சரித்த இடவிளக்க, சீதோஷண நிலைமைகள் காரணமாக வேறுபடுகிறது நிலநீர் காணப்படும் வலயங்களை நீரியத் புவிச்சரிதவியலின் அடிப்படையில் பின்வரும் தொகுதிகளாக மேல்வரியாக குரிக்கப்படும்.

1. யாழ்ப்பாணக் குடாநாட்டையும் தீவுகளையும் முற்றுறச் சூழ்ந்ததாய் இலங்கையின் வடக்கு, வடமேற்கு கரையோரத்தினுள் அமைந்து பிரதானமாக மயோசீன காஸ்ற் சுண்ணக்கற்களைக் கொண்ட படிவுப்பாறைத்தொடர்

2. கரையோரத்தின் அநேக பகுதிகளிற் காணப்படும் கடற்கரை மணற் படிவுகளும் கேம்பிரியாவுக்கு முற்பட்டகால அடித்தளத்தையும் அடையற்பாறையையும் மூடியதாய் ஆற்று வெளிவீழ்ச்சிகளுள் அமைந்துள்ள மெல்லிய வண்டற்படிவுகளும்.

3. மீதி மண்ணிலும் பள்ளத்தாக்கு வண்டல் மண்ணிலும் மெல்லியதர்க மூடப்பெற்று நாட்டின் கிட்டத்தட்ட 90 சத வீத இடப்பரப்பில் காணப்படும் கடின பளிங்குருப் பாறைப் பிரதேசம்.

வலயம் i இல—அதாவது அடையற்பாறைகளில்-நிலநீரின் நிலைப்பண்பு மிக உயர்வாக உள்ளது. அதில் ஒரு பகுதி மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. வனதவில்லை, மதுரன்குளி, மன்னார். சிலாவத்துறை, முழங்காவில், பரந்தன். முல்லைத்தீவுப் பிரதேசங்களில் மீக்க ஆழத்தில் நிலநீர்க் கொள்படைகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவவடிநிலங்களிற் பெரும்பாலானவை நீர் உட்புக முடியாதனவும் ஓரளவில் நீர் உட்புகக் கூடியனவுமான அமைப்புகளால் மூடப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. அதனால், மட்டுப்படுத்தப்பட்ட இடங்களில் மட்டுமே நீர் ஒழுக்கு நிலைமை காணப்படுகிறது. மூடுபடை மிக மெல்லியதாக இருக்கும். யாழ்ப்பாணக் குடாநாட்டில் நீர்த் தேவைகள் யாவற்றுக்கும் நிலநீரே மூலமாக இருந்து வந்துள்ளது. கிடைக்கப் பெறும் நன்நீரின் அளவினை அறிவதற்கும் கடல் நீரின் பக்கவுட்புகுகை மூலம் மிதக்கும் மெல்லிய நன்நீர் வில்லைகள் சேதமுறும் அபாயத்தைத் தடுக்கும் வகையில் நீரைப் பயன்படுத்துவதற்குப் பாதுகாப்பான எல்லைகளை அறிவதற்குமென நுண்ணாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பிரதேசங்களில், ஆழமற்றவை முதல் மட்டான ஆழமுள்ளவை வரையிலான குழாய்க்கிணறுகளிலிருந்து மணித்தியால மொன்றுக்கு 6000 கலன் முதல் 24000 கலன் வரையில் நிலநீர் பெறப்படுகிறது.

வலயம் 2 இல்- அதாவது கடற்கரை மணற் பிரதேசங்களிலும் வண்டற் படிவுகளுள்ள ஆற்றுமுகப் பிரதேசங்களிலும்- நிலநீரிள் நிலைப்பண்பு கணசமாக உள்ளது. இவ்வலயத்திற் கிடைக்கப் பெறும் நல்லதரமான நீர் மழைநீரின் திரும்பத்தாக்கு இருகை மூலமும் கடல்நீர் உட்புக்கும் அபாயத்தினாலும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பிரதரன ஆற்றுக் கழிமுகப் பிரதேசங்களிலும் நெய்தல் நிலப் பிரதோங்களிலும் உள்ள ஆழமற்ற குழாய்க் கிணறுகளிலுமிருந்து மணித்தியால மொன்றுக்கு 2000 கலன் முதல் 6000 கலன் வரையில் நீர் பெறப்படுகிறது.

கடினமான அடித்தளப் பாறைகள் காணப்படும் ஏனைய பிரதேசங்களில் நிலநீர் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உள்ளது. பிளவுகளும், பாறை உடைவுகளும், வெட்டுத்தொடு விசைகளும் உள்ள வலயங்களில் மட்டுமே அதுஉள்ளது. மேலும், தடித்த மூடுபடையைக் கொண்ட, மலைகளுக்கிடைப்பட்ட பள்ளத்தாக்குப் பிரதேசங்களில் கணிசமான நிலநீர் உள்ளது. அதைப் பயன்படுத்த முடியும். இவ்வலயத்திலுள்ள கிணறுகளிலிருந்து மணித்தியாலமொன்றுக்கு 200 கலன் முதல் கிட்டத்தட்ட 5000 கலன் வரையில் நீர் பெறப்படுகிறது. இங்கு சாதாரணமான மணித்தியாலம் ஒன்றுக்குச் சராசரியாக 1000 கலன் நீர் பெறப்படுகிறது. ஒரு கிணற்றிலிருந்து பெறக்கூடிய நீரின் அளவு, புவிவெளியுருவவியல், புவிச்சரிதக் கட்டமைப்பு ஆகியவை தொடர்பில் கிணற்றின் அமைவிடத்திலும் நிலநீர்ச் சேமிப்பிலும் அமைப்பின் செலுத்துதிறனிலும் கிணற்றின் வடிவமைப்பு, கட்டுமானம் ஆகியவற்றிலும் தங்கியுள்ளது என்பதை மனதிற் கொள்ளுதல் வேண்டும்.

VIDUT4-2/3-21

காட்டு வளங்கள்

சிறி பாரதி
பிரதிக் காடுபேணலதிபர்

மனிதலத்து மிகப்பழைய உயிரினக் கூட்டமெனக் கருதப்படும் அயன மண்டலக்காடு சிக்கலான கூட்டு வாழ்வும் நாம் ஒருசில மட்டும் தெரிந்திருக்கும் நுண்ணிய ஒத்துழைப்பு முறையும் கொண்டது. வரலாற்றுக் காலங்களில் புவியின் பெரும் பாகத்தில் பரந்திருந்த உச்சக காட்டுவகைகளின் அழிவுக்கு தொழினுட்பமும் பூதாகாரமான சனப்பெருக்கமும் காரணிகளாக இருந்துள்ளன. "அயன மண்டல மழைக்காடு" என்னும் நூலின் ஆசிரியரும் அயன மண்டலச் சூழலியல் வல்லுநருமான போல் இரிச்சாட்சு என்பவர் ஒரு பரம்பரைக் காலத்தினுள் அயன மண்டலக் காடுகள் மறைந்து விடும் எனக் கூறியுள்ளார்.

எனினும் தற்கால மனிதன் தனது வாழ்க்கைப் போராட்ட விடயமாகவும் தனது சொந்த நிலைபேறு பொருட்டும் தனது புராதன உறைவிடமான காட்டை மிகப்பெரிய இயற்கை வளங்களுள் ஒன்றெனக் கருதத் தலைப்பட்டுள்ளதோடு தன்னையும் தாவரங்கள், விலங்குகள் ஆகியவற்றையும் பாதுகாக்கும் பணியை அது மேற்கொண்டுள்ளது எனவும் கருதத் தலைப்பட்டுள்ளான்.

காடுகள் பாதுகாப்பு; உற்பத்தி, அழகியற் பணிகளை ஆற்றுகின்றன என்பது ஏழாவது உலகக் காட்டுத் துறைக் காங்கிரசின் பிரகடனத்தில் நன்கு விளக்கப்பட்டுள்வது. அது "காடுகள் மண்ணரிப்பைத் தடுக்கின்றன; கமத்தொழிலைப் பாதுகாக்கின்றன, வெள்ளப் பெருக்கைக் குறைக்கின்றன; துப்பரவான நீரை உறுதிப்படுத்துகின்றன; பொழுதுபோக்கு வசதிகளை அளிக்கின்றன; காட்டு உயிரினங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்றன; சூழல் நிலை குலைவுக்கும் எதிரான பொதுப் பாதுகாப்பாக அசுத்தமுறுகையைக் குறைக்கின்றன; விறகையும் மனிதனின் முயற்சிகள் ஒவ்வொன்றிலும் சம்பந்தப்படும் மரத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழிற் பொருள்களுக்கான மரத்தையும் அளிப்பதோடு தொழில் வாய்ப்பையும் வழங்குகின்றன. சுருங்கச்சொன்னுல் காடுகள் மனிதனின் சூழல், சமுக, பொருளாதார முன்னேற்றத்துக்குத் திட்டவட்டமாக உதவுகின்றன", என்று கூறுகிறது.

காலநிலையின் விளைவுகளை மட்டுப்படுத்துவதிலும் வளிமண்டல அசுத்தத்தின் தாக்கத்தைக் குறைப்பதிலும் காடுகள் முக்கிய பங்கினை வகிக்கின்றன. மேலும் காடுகள் மழை, காற்று ஆகியவற்றின் விளைவுகளைக் குறைப்பதிலும் மண்ணரிப்பைத் தடுப்பதிலும் மண்ணின் நீர் ஆட்சியைக் கட்டுப்படுத்துவதிலும் உதவுகின்றன. எனவே இப்போது காட்டின் பாதுகாப்புப் பணிக்கு அதன் உற்பத்திப் பணிக்கு மேலாக முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. காட்டின் உற்பத்திப் பணியை இலகுவில் கணக்கிட்டுக் கூறிவிடலாம். ஆனுல் அதன் பாதுகாப்புப் பணியை இலகுவில் கணக்கிட்டுக் கூற முடியாது. இத்தகைய இடர்நிலை தேசிய பொருளியற் கட்டமைப்பினுள் காட்டின் முக்கியத்துவத்தை நேராக மதிப்பீடு செய்வதைத் தடுக்கிறது.

இலங்கையின் நிலப்பரப்பு 25,332 சதுர மைல் அல்லது ஒரு கோடியே 60 இலட்சம் ஏக்கர். இதில் 70 லட்சம் ஏக்கர் நிலம் அதாவது 45 சதவீதம் 1956 இல் காட்டுப் பிரதேசமாக இருந்தது. 1956 க்கும் 1980 க்கும் இடையில் காட்டு நிலப்பரப்பு கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளது. தற்போது 40 இலட்சம் ஏக்கர் அல்லது 25 சத வீதம் காட்டுப் பிரதேசமாக உள்ளது.

இலங்கையில் மூன்று மழைவீழ்ச்சிப் பிராந்தியங்கள் உள்ளன. அவை ஈர வலயம், இடைநிலை வலயம், உலர் வலயம் ஆகும். இப்பிராந்தியங்கள் ஒவ்வொன்றிலும் அவவற்றுக்குரிய தனிச்சிறப்பு வாய்ந்த காடுகள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் தாவர இனவமைப்பில் ஏனையவற்றிலிருந்து வேறுபட்டுள்ளன. சில இனத் தாவரங்கள் ஈரவலயத்தில் மட்டுமே வளருகின்றன; சில தாவரங்கள் உலர்வலயத்துக்கென மட்டுப்படுத்தப் பட்டுள்ளன. இடைநிலை வலயத்தில் ஈரவலய இனங்களும் உலர்வலய இனங்களும் அக்கம் பக்கத்தில் வளர்கின்றன.

காலநிலை வழி வரையளவு செய்யப்பட்ட இம் 3 வலயங்கள் ஒவ்வொன்றுள்ளும் தரமான வகுப்புகளின் மரப் (பெருகை) பரம்பலும் தனித்தன இனங்களின் பரம்பலும் இடஞ்சார் காரணிகளின் இணைப்பினுல் தீர்மானிக்கப்படுகின்றன. அக்காரணிகளுள் ஈரலிப்பு கிடைக்கப் பெறுதல், மண்ணின் அமைப்பு, ஆழம் நீர் உட்புகும் தன்மை, போஷணை அடக்கம், நிலத்தி சரிவு, மனிதனின் தலையீட்டு அளவு ஆகியன பிரதானமானவை.

தீவின் தென்மேற்குப் பிராந்தியத்தில் (ஈரவலயம்) உள்ள என்றும் பசுமையான மழைக்காடு மொத்தத்தில் 152,000 கெக்டர் பரப்பளவைக் கொண்டது. இதில். மர உற்பத்தியில் ஈரவலயப் பசுங்காட்டிலும் தரங் குறைந்த மொன்தானுக் காடுகம் உள்ள 40000 கெக்டர் நிலம் அடங்குகிறது; ஆனுல் இடைநிலை வலயக்காடுகள் உள்ள 81,000 கெக்டர்ரில் அடங்கவில்லை. தற்போது

ஈரவலயக் காடுகளும் இடைநிலை வலயக் காடுகளும் ஒருங்கே மொத்தக் காட்டுப் பிரதேச நிலப்பரப்பில் 8 சத வீதம் வரையில் உள்ளன. இக்காடுகளிற் பெரும் பாலானவை சென்றடைய முடியாத மலைப் பிரதேசங் களில் உள்ளன.

நாட்டின் பயன்படுத்தப்படாத மரவளங்கள் ஈர வலயத்தில் குவிந்து கிடக்கிற போதிலும் அவை இக் கட்டான நீர்ப்பிரிநிலப் பிரதேசங்களில் இடம் அமைந் திருப்பது இக்காடுகளின் முகாமைக்கு மேலதிகப் பிரச் சினைகளை ஏற்படுத்துகிறது. இக்காடுகளிற் காணப்படும் முக்கிய மரவகைகள் வருமாறு:

டென்சு, கொராசு, நா (மேசுவா பெரா)
கட்டப்பொத்த (குல்லெனியா)
மலப்பொத்த (மிரிசுத்திக்கா இடக்ரிலோயித்சு)
பெலென் (குருரிமியா சிலனிக்கா)
குருகின்ன (கலோப்பிலம் கலப்பா)

உலர் வலய வகைக்காடு கிட்டத்தட்ட 17 இலட்சம் கெக்டர் நிலப்பரபபில் அல்லது காட்டு நிலப்பரப்பின் 82 சத வீதத்தில் உள்ளது. இக்காடுகள் தாழ்வு ஒட்டுக்கட்டை காரணமாகவும் தாழ்ந்த சுண்டுப் பெறுகை காரணமாகவும் மர உற்பத்தி தொடர்பில் பொருளாதார முக்கியத்துவமற்றவையாகும் மேலும் பயன்படுத்தக்கூடிய இனங்கள் குறைவக இருப்பதோடு அவை பரந்த இடப்பரப்பில் சிதறியும் கிடக்கின்றன. பிரதான மரவகைகள் வீரை, மோரு, வெலஸ், மில்ல, சற்றின், கல்மில்ல, கொன் முதலியனவாகும்.

1978 - 12 - 31 இல் இருந்தவறுன இலங்கை இயற் கைக் காடுகளின் பரப்பளவுகளை அட்டவணை I தருகிறது

காடு பேணுவதியரின் ஆண்டறிக்கை - 1978
அட்டவணை I

1978 - 12 - 31 இல் இருந்தவாறுன இயற்கைக் காடுகள் (வன ஒதுக்கிடங்கள்) ஏக்கரில்:

ஆல்புலக் கூறு	கூறின் பரப்பு	ஒதுக்கத்தின் பரப்பு	பரப்பளவு %
தெற்குப்பகுதி			
தென்மாகானம்	13,73,440	1,32,994	9.68
மலைநாட்டுப் பகுதி			
ஊவாமாகாணம்	20,19,200	21,657	1.07
மத்திய மாகாணத்தின் கண்டி, நுவரெலியா மாவட்டங்கள்	8,79,360	1,04,722	19.91
வடக்குப் பகுதி			
வடமாகாணம்	21,52,320	4,28,728	19.92
வட மத்திய பகுதி			
வடமத்திய மாகாணம்	25,61,280	4,33,474	66.92
கிழக்கு மாகாணத்தில் திரிகோணமலை மாவட்டம்	7,45,600	1,69,127	22.10
கிழக்குப் பகுதி			
கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்கள்	18,37,440	5,22,606	28.44
வட மேற்குப் பகுதி			
வட மேல் மாகாணம்	19,18,080	3,29,715	17.19
மத்திய மாகாணத்தில் மாத்தளை மாவட்டம்	5,92,000	36,105	6.10
சப்பிரகமுவ மாகாணம் (பகுதி)	282,880	6,994	2,45
மேல் மாகாணம்	140,800	4,430	3.15
மேற்குப் பகுதி			
மேல்மாகாணம்(பகுதி)	7,75,680	56,366	7.27
சப்பிரகமுவ மாகாணம் (பகுதி)	933,760	116,871	12.52
மொத்தம்	1,62,11,846	23,63,762	14.58

VIDUT 4-2/3-23

எமது கனிப்பொருள் வளங்களைத் திரட்டிப் பயன்படுத்துதல்

ஜே. பி. ஆர். பொன்சேகா
பிரதான இரசாயன வியலர்,
புவிச்சரிதவியல் அளவைத் திணைக்களம்

எமது நாடுபோன்ற வளர்முக நாடொன்றுக்கு இன்று கனிப்பெருள்கள் மிக முக்கிய மானவையாய் உள்ளன. தற்காலக் கைத்தொழில்களுக்கு அவை இன்றியமையாதவையாகவும் உள்ளன. நவீன கட்டடங்கள், வீதிகள், எந்திரங்கள் யாவும் கனிப்பொருள் கனிலிருந்து பொருள்களைக் கொண்டே கட்டப்பட்டுள்ளன. ஆயுதங்கள் வெடிமருந்துகளால் ஆன இராணுவ பலத்துக்குக் கனிப்பொருளே பெரும்பாலும் மூல தாரமாக உள்ளது. கனிப்பொருள் உரங்களும் நீரும் மண்வளத்தைப் பேணுகின்றன .விண்வெளிப் பயணம் போன்ற தற்கால விஞ்ஞான, தொழினுட்பச் சாதனைகள் கனிப்பொருள்களாலேயே சாத்தியமாகியுள்ளன. ஆதலின் எமது நாட்டு நலனை முன்னிட்டு நாம் கனிப்பொருள் வளங்களைத் திரட்டிப் பயனபடுத்துதல் வேண்டும்.

கைத்தொழிற்றுறையில் உயர்நிலை வகிக்கும் நாடுகளில் கனிப்பொருள் ஒவ்வொன்றின்தும் மொத்த, தனி நபர் உபயோகம் மிக உயர்வாகவே உள்ளது. மறுபுறத்தில், விவசாய நாடுகள் கனிப்பொருள் உபயோகம் மிகக் குறைவாகக் காணப்படுகிறது. இந்த நாடுகள் தம்மை வளர்ச்சியுறு நாடுகளென அழைத்துக் கொண்டு கைத்தொழிலை விருத்தி செய்வதற்கு அடிக்கடி முயற்சிக்கின்றன, இலங்கை இத்தகைய நாடுகளுள் ஒன்றாகும், எனினும், எமக்கு வேண்டிய கனிப்பொருள் அனைத்தையும் அளித்துதவுவதற்கு இலங்கையில் எம்மிடம் இருபத்தையாயிரம் சதுர மைல்கள் மட்டுமே உள்ளன என்பதை இங்கு குறிப்பிடவேண்டி யுள்ளது. ஆனால்; பூமியைச் சுற்றி வர அதன் அரைப் பங்கு தூரத்துக்குப் பரந்து விரிந்துள்ள சோவியத்து உருசியா போன்ற ஒரு நாடு தனக்கு வேண்டிய எந்தவொரு கனிப்பொருளையும் தனது நாட்டிலிருந்தே பெற்றுக் கொள்ளலாம். ஆதலின் நாம் எம்மிடமுள்ள அற்ப சொற்ப கனிப்பொருள் வளங்களை மிக்க கவனத்துடன் திரட்டிப் பேணிப் பயன்படுத்த வேண்டியது அவசியமாகும்.

சிங்கள மன்னர்கள் காலந்தொட்டு இலங்கை ஒரு விவசாய நாடாகக் கருதப்பட்டுவந்துள்ளது.அந்நிய ஆட்சிக் காலங்களில் நாட்டு வருமானத்திற் பெரும் பகுதி தேயிலை, இறப்பர், தென்னை, நெல் போன்ற கமக் கைத்தொழில்கள் மூலமே பெறப்பட்டன. அதன் விளைவாக அபிவிருத்தி முயற்சிகள் அனைத்தும் இக்கைத்தொழில்களை விருத்தி செய்வதற்கே பயன்படுத்தப்பட்டன. அதனால் எமது கனிப்பொருள் வளங்கள் புறக்கணிக்கப்பட்டன. எமக்குத் தேவையான சீமந்து, மட்பாண்டப் பொருள் அனைத்தையும் செங்கல், ஓடு ஆகியவற்றின் பெரும் பகுதியையும் வெளிநாடுகளிலிருந்தே நாம் இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது. அந்தக் காலத்திலிருந்த ஒரேயொரு சுரங்கக்கைத்தொழில் பென்சிற்கரிக் கைத்தொழில் ஆகும். அதுவும் எமது குடியேற்ற எசமானர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவே செய்யப்பட்டது. அவர்கள், தமது நாட்டுக் கைத்தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருள்களை அளிப்பதற்காக பென்சிற் கரியை ஏற்றுமதி செய்தனர். இந்த நிலைமை நீண்டகாலம், இரண்டாம் உலக யுத்தம் வரையில், தொடர்ந்து நிலவியது. இறக்குமதிக் கட்டுப்பாடுகள் காரணமாக உள்ளூர் மூலப் பொருள்களைப் பயன்படுத்தி மட்பாண்டப் பொருள்கள், ஓடுகள். செங்கற்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்கு இலங்கையில் பல முன்னோடித் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. யுத்த கெடுபிடிகள் முடிவடைந்த பின்னர் நாட்டில் கைத்தொழில்களுக்குப் பயன்படுத்தக் கூடிய கனிஜ மூலப் பொருள்கள் என்னென்ன உள்ளன என்பதை அறிவதற்கு ஒருமுகப்படுத்தப்பட்ட முயற்சி எடுக்கப்பட்டது எமது கனிப்பொருள் வளங்கள் பற்றிய முறையான பட்டியல்கள் இல்லாதிருந்தமையால் இலங்கையின் கனிஜ, கைத்தொழில் இயல்தகுதியை மதிப்பிட முடியாதிருந்தது. அதனால் அக்காலத்தில் அத்தகைய ஆய்வு அத்தியாவசியமாக இருந்தது. மேலும், எமது பிரதான உற்பத்திப் பொருள்களான தேயிலை, இறப்பர், தெங்குப் பொருள்களின் விற்பனை விலையில் வீழ்ச்சி ஏற்

பட்ட அதேவேளையில் எரிபொருள், உரம், எந்திரங்களின் விலை அதிகரித்தல் அவற்றின் உற்பத்திச் செலவு அதிகரித்திருந்தது. அதனால் நாம் வேறு வருவாய் மூலத்தை நாட வேண்டியிருந்தது. எனவே, அவற்றிலிருந்து பெறப்பட்ட கனிப் பொருள்களும் உற்பத்திப் பொருள்களும் எமது வருவாய், தொழில் வாய்ப்பு ஆகிய வற்றின் மாற்று மூலங்களாக அமைந்திருந்தன.

முழு அளவிலான, முறைமையிலமைந்த கனிப் பொருள் ஆய்வு நிகழ்ச்சித் திட்டம் ஒன்று இலங்கையில் 1930 ஐ அடுத்த பத்து ஆண்டுகளின் பிற்பகுதியில் கனிப் பொருளியல் திணைக்களத்தினால் (இப்பொது புவிச்சரிதவியல் அளவைத் திணைக்களம்) ஆரம்பிக்கப் பட்டது. இத்திட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் முயற்சிகளின் பெரும்பகுதி நிலமட்டத்தில் அல்லது அதற்கு அணித்தாகவுள்ள பொருளியல் முக்கியத்துவம் வாய்ந்த கனிப் பொருள்களைக் கண்டு கொள்வதற்கு நாட்டின் மூலைமுடுக்குகளுக்கெல்லாம் செல்வதிற் செலவிடப் பட்டது. அப்போது, கைவசமிருந்த வரையிட்ட வளங்களைப் பயன்படுத்திக் கணிசமான முன்னேற்றங் காணப் பட்டது. பொருளியல் ஆக்கவளமுள்ள கனிப் பொருள்கள் சில இனங்காணப்பட்டன. தீவின் தென்மேற்குக் கோடியில் நிலமட்ட இல்மனைற்று இரும்புத்தாதுகள் கண்டு பிடிக்கப்பட்டதோடு சைனக்களிப் படிவுகளும் கரையோரக் கனிப்பொருட் படிவுகளும் முத்துராசவெல முற்றுநிலக்கரிப் படிவுகளும் கண்டுபிடிக்கப்பட்டன. எனினும். அத்தொழினுட்பங்களை மறைந்து அல்லது ஆழத்தில் இருக்கும் கனிப் படிவுகளுக்குப் பயன்படுத்த இயலவில்லை. நிலங்கீழ்ப் படிவுகளை நவீன விஞ்ஞான நில ஆய்வுத் தொழினுட்பங்களைப் பயன்படுத்தியே ஆராய முடியும். அத்தொழினுட்பங்கள் புவிப்பௌதிகவியல், புவியிரசாயனவியல் இரேடியோ மீற்றரியல் என்பவையாகும். அவை ஒரு பிரதேசத்தின் கனியவியல், அமைப்பு, புவிச்சாதவியல், வரலாறு ஆகியவற்றின் அறிவையும் கனியவாக்கத்துக்குச் சாதகமான காரணிகள் பற்றிய அறிவையுங்கொண்டு கிரமமான முறையில் தாடுப்படிவங்களைத் தேடும் முயற்சியை அடிப்படையாகக் கொண்டவை. புவிச்சரிதவியல் அளவைத் திணைக்களம் இத்தொழினுட்பங்களை வான்முக நிழற்படங்கள், வைரத் துளையிடற் செயனுட்பங்களுடன் பயன் படுத்தி பொருளாதார ரீதியில் பயன்படுத்தக் கூடிய கனியப்பொருட்கள் பற்றிய ஆர்வமூட்டக் கூடிய புதிய காண்புகளைத் திரட்டியுள்ளது.

ஆண்டுக் காலமாக புவிச்சரிதவியல் அளவைத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட பல்வேறு அளவைகளும் நிகழ்ச்சித் திட்டங்களும் பொருளியல் முக்கியத்துவம் வாய்ந்த கனியப் பொருள்கள் பலவற்றை அதிகரித்த என்ணிக்கையிற் கண்டு பிடிப்பதற்கு உதவியுள்ளன. அவை கடினப் பாறைகளிலும் வானிலையால மிந்த பாறைகளிலிருந்து பெறப்பட்ட வண்டற்படிவுகளிலுமே கண்டிபிடிக்கப்பட்டுள்ளன. அக்கனியங்கள் வருமாறு:

இரும்புத் தாதுகள்

இல்மனைற்று, கியொதைற்று, மக்னெற்றைற்று

சுண்ணக்கற் கனியங்கள்

அடையல், முருகைக்கல், ஓடு, பளிங்கு

கிளர்மின்வீசு கனியங்கள்

மொனசைற்று, தோரியனைற்று, அல்லனைற்று

தித்தானியம் கனியங்கள்

இல்மனைற்று, றுற்றைல்

சிருக்கோனியம் கனியங்கள்

சிருக்கொன், பத்தலைற்று

சிலிக்கேற்றுக் கனியங்கள்

மலைவெடிப்புப் படிகம், சிலிக்கா மணல்; சிருக்கொன் மணல், களிக்கல், பாம்புக்கற் செம்மணி மணல், கொடியரைற்று, சிலிமனைற்று

செப்டிக் கனியங்கள்

கல்கொப்பரைற்று

பொசுபரசுக் கனியங்கள்

அப்பரைற்று

காபன் கனியங்கள்

பென்சிற்கரி, முதிராநிலக்கரி

மைகா கனிப்பொருள்கள்

புளொகெப்பைற்று, மூசுக்கொவைற்று பையெர்தைற்று

களிக் கனியங்கள்

சீனக்களி, பந்துக்களி, சீமந்துக்குரிய களி செங்கல் ஓடுகளுக்கானகளி

மணிக்கற்கள்

பல்வகைப்பட்ட இவற்றுள் முக்கியமானவை வருமாறு

நீலமணிக்கல், மாணிக்கம், அலெச்சான்றைற்று (பச்சைக்கல்வன), வைடூரியம், மரகதம், அக்குவாமரைன், புட்பராகம், தோமலைன், காணெற் இசுப்பினெல், சேக்கோன், சந்திரக்கல், அயொலைற்று, படிகக்கல்

கனிப்பொருள் ஆய்வு நிகழ்ச்சித்திட்டத்தின் போது வேறும் பல கனிப்பொருள்கள் கண்டுபிடிக்கப் பட்டன. ஆனால் இதுதாலும் கண்டுபிடிக்கப்பட்டவற்றின் தொகைகள் மிகக் குறைவானவை அதனால் அவை தற்போது பொருளாதாரரீதியில் தாத்தியமற்றவையாக உள்ளன. எனினும் மேலும் ஆய்வுகள் மேற் கொள்ளப்படும் போது இக்கனிப்பொருள்களின் தோற்று மூலங்களைக் கண்டுபிடிப்பது சாத்தியமாகும். அப் போ அவற்றை அதிக அளவிற் கண்டுபிடித்து கைத் தொழிலிற் பயன்படுத்த முடியும்.

பல்வேறு கைத்தொழில்களிலும் மூலப் பொருள்களாகப் பயன்படுத்தக்கூடிய பல்வகைக் கனிப்பொருள்களைக் கண்டுபிடித்த பின்னர் எமது நாட்டு நலன் நோக்கில் அவை எவவாறு திரட்டப்பட்டுப் பயன்படுத்

தப்படுகின்றன என்பதை இனி ஆராய்வோம். (யாழ்ப்பாணக் குடாநாட்டில் பயன்மிக்க சுண்ணக்கற் படுக்கைகளும் மன்னாரில் களிமண் படுக்கைகளும் கண்டுபிடிக்கப்பட்டதன் விளைவாக) சீமந்தை உற்பத்தி செய்வதற்காக காங்கேசன் துறையில் ஆரம்ப கைத்தொழில்களில் ஒன்றான சீமந்துத் தொழிற்சாலை 1940 ஐ அடுத்த பத்து ஆண்டுகளின் பிற்பகுதியில் தாபிக்கப்பட்டது. மேலும், இரண்டு கோடி தொன் உயர்ரக சுண்ணக்கல்லும் போதிய அளவு களி வளங்களும் புத்தளத்தில் கண்டுபிடிக்கப்பட்டதானல் அங்கு இரண்டாவது சீமந்துத் தொழிற்சாலை தாபிக்கப்பட்டுள்ளது சீமந்து உற்பத்தி இப்போது சீமந்துக் கூட்டுத்தாபனத்தின் பொறுப்பில் உள்ளது. கூட்டுத்தாபனம் காலியில் அரைத்தற் பொறித் தொகுதி ஒன்றை அமைத்து அதன் உற்பத்தியை அதிகரித்ததோடு தெற்கிலும், அங்கு கிடைக்கக்கூடிய சுண்ணக் கற்களைப் பயன்படுத்துவதற்கு, தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கு உத்தேசித்துள்ளது.

பொருளாதார ரீதியில் பயன் விளைக்கக் கூடிய வெண்களி, திக்களிமண், படிகம், பந்துக்களி, களிக்கல், தொலமைற்றுப் படிவுகள் கண்டுபிடிக்கப்பட்டதன் விளைவாக விரிந்து செல்லும் மட்பாண்டக் கைத்தொழிலைத் தாபிப்பதற்குத் தேவையான மூலப் பொருள்கள் அனைத்தையும் தற்போது உள்ளூரிலேயே பெறக் கூடியதாக உள்ளது. அதன் விளைவாக மட்பாண்டப் பொருள் சுவர் ஓடுகள், மின் மட்பாண்டப் பொருள்களையும் நுணுவித அலங்காரப் பொருள்களையும் சித்திர வேலைப்பாட்டுப் பொருள்களையும் உற்பத்தி செய்வதற்குத் தீவின் பல்வேறு பகுதிகளின் நான்கு தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. வெண்களியைச் செம்மைப் படுத்துவதற்கு இரண்டு தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு தொழிற்சாலைகளும் பல்வேறு மட்பாண்டத் தொழிற்சாலைகளுக்கு செம்மையிட்ட வெண்களியை வழங்குகின்றன. உள்ளூர் வண்ணக் குழம்பு, கடதாசி, இறப்பர்க் கைத்தொழில்களுக்கும் இத்தொழிற்சாலைகளே வென்களியை வழங்குகின்றன.

களிமண் படிவுகள் பற்றி கிரமமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதன் நேர் விளைவாக களி மண்ணைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யும் பொருள்கள் இப்போது நாடு பூராகவும் உற்பத்தி செய்யபபடுகின்றன. அவற்றுக்கான களிமண் அண்மைக் காலம்வரையில் இறக்குமதி செய்யப்பட்டது. குடிசைக் கைத்தொழில் ஆண்டொன்றுக்கு 35 கோடி முதல் 40 வரையிலான செங்கற்களை உற்பத்தி செய்கிறது. மங்களூர் மாதிரி வகை மெருகிடா ஓடுகளைக் கிட்டத்தட்ட ஐம்பது நவீன தொழிற்சாலைகள் உற்பத்தி செய்கின்றன. அவற்றின் மொத்த ஆண்டுதோறும் ஐந்து கோடி ஓடுகளுக்கும் அதிகமாகும்.

மண்ணாலான குழாய்கள், தள ஓடுகள் ஆகியனவும் இங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்றன. கன்வெலையில் வெப்பத்தடைத் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. நாம் எமது சேக்கோன் சில்லிமனைற்று தொலமைற்று மூலப்பொருள்களை அத்தொழிற் சாலைக்கு உபயோகிக்கலாம் அதன் பின்னர் நாம் எமது மட்பாண்ட, உருக்குத் தொழிற்சாலைகளுக்குத் தேவையான உலை அனை தொடர்பில் தன்னிறைவு அடைந்துவிடுவோம் தொலமைற்று வகையைச் சேர்ந்த பளிங்குச் சுண்ணக்கல் பொருந் தொகையில் கிடைக்கப் பெறுகிற போதிலும் அது இன்று வரையில் பிரதானமாக மட்பாண்டத் தொழிற்சாலையிலும் மண்ணின் மகனீசிய குறைபாட்டைச் சரி செய்வதற்காக கமத்தொழிலும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பயன்படுத்தப்படுகிறது எனினும் இவ்வகைச் சுண்ணக்கல்லை மகனீசியாவை உற்பத்தி செய்வதற்கும் பயன்படுத்த முடியும். தேவைப்படும் மூலப் பொருள்களான கடல்நீரும் தொலமைற்றும் இலங்கையிற் கிடைக்கப் பெறுகிறது. ஆதலின் மக்னிசியாவை இங்கு உற்பத்தி செய்வது சாத்தியமானது. பிரித்தானிய பேபிடோர் கம்பனி இம்முறையிலேயே மக்னீசியாவை உற்பத்தி செய்கிறது.

ஒரு கோடியே இருபது இலட்சம் தொன் இலிமனைற்று, மக்னைற்று வகை இரும்புத்தாது ஒதுக்கீடுகள் இருப்பதனல் இம்புத் தாதுவைப் பயன்படுத்துவதற்கு இலங்கையில் உருக்கியெடுத்தற் பொறித் தொகுதி ஒன்று நிருமாணிக்கப்படும் காலம் வெகு தூரத்தில் இல்லை. உருக்குக் கூட்டுத்தாபனம் உருசிய உதவியுடன் இந்த நேகக்கத்துக்கு ஒறுவலையில் பொறித் தொகுதி ஒன்றைத் ஏற்கனவே தாபித்துள்ளது. அதை மூன்று கட்டங்களிற் தொழிற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டத்தில் இறக்குமதி செய்த இரும்புப் பாளங்கள் பயன்படுத்தப்படும், இரண்டாவது கட்டத்தில் கழிவு இரும்பு பயன்படுத்தப்படும், இறுதிக் கட்டத்தில் எமது சொந்த இரும்புத்தாது பயன்படுத்தப்படும். முதல் இரண்டு கட்டங்களும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எமது இரும்புத் தாதினைப் பயன்படுத்தும் மூன்றாவது கட்டத்துக்கான திட்ட வேலைகள் ஏற்கனவே முன்னேற்றங் கண்டுள்ளன. சேருவ்லைப் படிவுமிக்க வாய்ப்புள்ள ஒன்றாக விளங்குகிறது அதில் மக்னைற்றோடு அப்பரைற், செம்பு கனிப்பொருள்களும் காணப்படுகின்றன. படிவு பயன்படுத்தப்படும் போது அப்பரைற்றையும் செம்பையும் உபபொருளாகப் பெறமுடியும்.

இலங்கைக் கடற்கரை மணலில் இல்மனைற்று, றுற்றைல், சேக்கோன் மொனசைற்று, காணற்று போன்ற பயன்மிக்க கனிப் பொருள்கள் காணப்படுகின்றன. இவை இலங்கையைச் சுற்றிப் பரந்து கிடக்கின்றன. ஆனல் சில இடங்களில் குறிப்பாகப்புல்மோட்டையில், செறிந்து காணப்படுகின்றன. இம் மணல்களைப் பயன்படுத்தி விருத்தி செய்யும் பொறுப்பு கனிப்பொருள், மணல் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கூட்டுத்தாபனம் அதன் புல்மோட்டைத் தொழிற்சாலையில் 90,000 தொன் செப்பனிட்ட

இல்மனைற்றையும் 12,000 தொன் றூற்ரையிலையும் 8000 தொன் சேக்கோனையும் 500 தொன் மொசைற்றையும் 200 தொன் சிலிமனைற்றையும் உற்பத்தி செய்யவுளளது. கூட்டுத்தாபனம் தற்போது உற்பத்திசெய்யும் கனிப்பொருள்கள் யாவும் தொகையாக சீரிடப்படாமல் யப்பான் போன்ற விருத்தியுற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இலங்கையில் மிகக பழமை வாய்ந்த கைத்தொழில்களில் மாணிக்கக்கல் கைத்தொழில், பென்சில் கரிக்கைத்தொழில் ஆகிய இரண்டும் அடங்குகின்றன. அன்மைக் காலம் வரையில் இந்த இரண்டு கைத்தொழில்களும் தனியார் துறையினரின் கைகளில் இருந்தன. ஆனுல் இப்போது அவை அரச ஆதரவு பெற்ற கூட்டுத்தாபனங்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. மணிக்கற் கைத்தொழில் பொறுப்பேற்கப்பட்ட பின்னர் அதை விருத்தி செய்வதற்கு 1971 இல் அரச மணிக்கற் கூட்டுத்தாபனம் தாபிக்கப்பட்டது. எனினும் மணிக்கற்களைத் தோண்டி எடுக்கும் வேலைகள் இன்னும் தனியார் துறையிடமே உள்ளன. இலங்கையிலிருந்து ஏற்றுமதியாகும் மணிக்கல் யாவும் கூட்டுத்தாபனத்தினூடாகவே ஏற்றுமதி செய்யப்பட வேண்டும். கூட்டுத்தாபனம் நிறைவான மணிக்கல் கைத்தொழில் ஒன்றைத் தாபிக்கும் முயற்சிக்கு முக்கிய பங்களிப்பைச் செய்துள்ளது. 1971 இல் ஏற்றுமதி செய்த மணிக்கல்லின் பெறுமதி 20 இலட்சம் ரூபாவென அறியப்பட்டது. 1977 இல் ஏற்றுமதி வருமானம் 20 கோடி ரூபாவுக்கும் மேலாக இருந்தது. மாணிக்கல் ஏற்றுமதி மூலம் பெறப்படும் வருவாய் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. மணிக்கற் கைத்தொழில் அந்நியச் செலாவணியைச் சம்பாதிக்கும் ஒரு பிரதான கைத்தொழிலாக மாறும் காலம் வெகு தூரத்தில்இல்லை பென்சிற் கரியை அகழ்ந்தெடுக்கும் வேலை தற்போது அரச பென்சிற்கரிக் கூட்டுத்தாபனத்தினுல் மேற்கொளப்படுகிறது. இலங்கையில் அகழ்ந்தெடுக்கப்படும் பென்சில் கரியில் காபன் உயர்வாக இருப்பதனுல் அதற்கு உலகம் பூராகவும் நல்ல கிராச்கி உண்டு. 90 சத வீத காபனுள்ள தரங்கள் சாதாரணமாகக் காணப்படுகின்றன. அகழ்ந்தெடுக்கப்படும் பென்சிற் கரியிற் பெரும்பாலானது ஏற்றுமதி செய்யப்படுகிறது, பென்சிற்கரி மூசைகள், பென்சில்களை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு சிலவற்றைத் தவிர உள்ளூரில் ஒரு சொற்பம் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது அரச பென்சிற்கரிக்கூட்டுத்தாபனம் ஆண்டுக்கணக்கிற் புறக்கணிக்கப்பட்டு வந்த மிக்காக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்யும் பொறுப்பையும் ஏற்றுள்ளது. வர்த்தக ரீதியாகப் பயன்படுத்தத்தக்க படிவுகளைக் கண்டறிந்து இக் கைத்தொழிலை உறுதியாகத் தாபிப்பதன் பொருட்டு கிரமமான ஆய்வுகள் இப்போது நடாத்தப்பட்டு வருகின்றன.

இலங்கையில் சிலிக்காப் படிவுகள் ஏராளமாக உள்ளன. நல்ல தூய்மையான மலைவெடிப்புப் படிகங்கள் (99% க்கு மேலாக சிலிக்கா) பரந்து கிடக்கும் படிவுகளிற் காணப்படுகின்றன. தூய குவாற்சைற்றுகள் மத்திய உயர் நிலப் பிரதேசங்களில் மைல் கணக்கில் காணப்படுகின்றன. இவ்விரண்டு வகைகளும் மட்பாண்டக் கைத்தொழிலில் பயன்படுத்தப்படுகின்றன. உயர் தர சிலிக்கா மணல் தீவின் பல்வேறு பகுதிகளில், குறிப்பாக நாத்தாண்டியா, மாதம்பை, சிலாபம், யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய இடங்களில், காணப்படுகின்றன. இந்த மணல் கண்ணுடி உற்பத்திக்கு மிக மிகப் பொருத்தமானது. சிலிக்கா மணலை மூலப் பொருளாகப் பயன்படுத்தி தகட்டுக் கண்ணுடியை உற்பத்தி செய்வதற்கு சீன உதவியுடன் தற்போது தொழிற்சாலை ஒன்று தாபிக்கப்படுகிறது. இத்தொழிற்சாலை உற்பத்தியை ஆரம்பிக்கும் போது எமது தகட்டுக் கண்ணுடித் தேவை பூர்த்தியுறுவது மட்டுமல்லாமல் ஏற்றுமதி செய்வதற்கும் போதிய அளவு கிடைக்கும்.

எனவே இதுவரை காலமும் எமக்குத் தெரியாது இருந்த இலங்கையின் இக் கனிப்பொருள் வளங்கள் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து எமது நாடு சில கனிப் பொருள் வளங்களைக், குறிப்பாக கைத்தொழிலுக்குரிய சில வலவகைக் கனிப் பொருள் வளங்களை, கனிசமான அளவுக்குக் கொண்டுள்ளது என்பது இப்போது தெளிவாகிறது. இப்படிவுகளை அடிப்படையாகக் கொண்டு பல தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. எனினும், இக்கனிப் பொருள்களிற் சில குறைவாகப் பயன்படுத்தப்படுகின்றன அல்லது பயன்படுத்தப்படாமலே கிடக்கின்றன என்பது ஆழமாகப் பகுப்பாய்வு செய்து பார்க்கும் போது தெரியவருகிறது. ஆதலின், ஏற்கனவே தாபிக்கப் பெற்ற அல்லது இனி மேல் தாபிக்கப்படவுள்ள கைத்தொழில்கள் முன்னேற்றங் காணவேண்டுமானுல் கனிப்பொருள்கள், சீரிட்ட கனிப் பொருள்கள், உப உற்பத்திப் பொருள்கள் பற்றி அகல்விரிவான நிகழ்ச்சிதிட்டமுறை யில மைந்த வேலைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். சில கனிப் பொருள்கள் பொருத்தமான சீர்படுத்தற் தொழினுட்பம் இல்லாமை காரணமாக சீர்படுத்தப்படாது இருப்பதனுல் அத்தகைய நிகழ்ச்சித்திட்டம் இப்போது அவசியமாகியுள்ளது. உதாரணமாக, கடற்கரைக் கனிப் பொருட் கைத்தொழில் கடந்த பதினைந்து ஆண்டுகலாக இருந்து வருகிற போதிலும் அவற்றின் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு வரும் றூற்றைல், இல்மனைற்று, சேக்கோன், மொசைற்று சிலிமனைற்று போன்ற முக்கிய கனிப் பொருள்கள் இங்கு சீரிடப்படாமலேயே ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இல்மனைற்று தொன் ஒன்று 18 யு. எஸ். டொலருக்கு விற்கப்படுகிறது. இதைத் தைத்தேனியம் சாம்பற் கசடாக அல்லது தொகுத்த றூற்றைல் ஆக மாற்றினுல் தொன் ஒன்று 175 முதல் 200 யு. எஸ். டொலருக்கு விற்கமுடியும். அதை மேலும் சீரிட்டுத் தைத்தேனியம் ஈர் ஒக்சைட்டு நிறப் பொருகளாக மாற்றினுல் தொன் ஒன்றுக்கு 1000 யு. எஸ். டொன் பெறமுடியும்

மேலும், தோரிய வளமுள்ள அருமண் பொசுபோற்றான மொனாசைற்று தோரியம், அருமண், பொசுபரசு சேர்வைகளை ஆக்குவதற்கு பயன்மிக்க ஒரு மூலமாகும். கருத்தாக்கியில் தோரியத்துக்குள்ள பெரும்பயன்பாட்டு வாய்ப்பும் பெற்றோலியச் செம்மையாக்கலில் அருமன் குளோரைற்று ஊக்கியாகப் பயன்படுத்தப்படுவதும் எதிர்காலத்தில் மொனாசைற்று ஒரு முக்கிய கனிப்பொருளாக மாறுவதற்கு இடமளிக்கும் மொனாசைற்றை உற்பத்திசெய்யும் இந்தியா பிரேசில் போன்ற நாடுகள் சீரிடப்படா உருவில் இக் கனிப்பொருள் ஏற்றுமதி செய்யப்படுவதைச் சட்டம் மூலம் முற்றாகத் தடை செய்துள்ளன. இலங்கையும் இந்நாடுகளைப் பின்பற்றுவதற்குச் சந்தர்ப்பம் இதுவாகும். சீரிடும் தொழினுட்பம் தாபிக்கப்படும் வரையில், தேவையேற்படின், அதனைச் சேமித்து வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். இலங்கையிற் காணப்படும் தோரினைற்று, அலனைற்று போன்ற கதிரியக்கத் தொழிற்பாட்டுக் கனிப் பொருள்கள் தொடர்பிலும் அதே நடவடிக்கைகள் ஏற்புடைத்தாகுதல் வேண்டும். மேலும், பிற கனிப்பொருட் கைத்தொழில்களை, குறிப்பாக ஒரு நூற்றாண்டுக் காலத்துக்கும் மேலாக அகழ்ந்தெடுக்கப்பட்டு இந்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப் பட்டுவந்த பென்சிற் கரிக் கைத்தொழிலை ஆராய்ந்து பார்க்கின் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கைத்தொழில்தானும் இங்கு தாபிக்கப்படவில்லை. எனினும், எமது பென்சிற்கரிக்கு அபிவிருத்தி அடைந்த நாடுகளில் நல்ல கிராக்கி உண்டு. புடக்குகைகள், மின்வாய்கள், காபன் கோல், உராய்வு நீக்கி போன்றவற்றைச் செய்வதற்கு அது பொருத்தமானதாகவும் உயர்தரத்தினதாகவும் இருப்பதே அதற்கான காரணமாகும்.

புவிச்சரிதவியல் அளவைத் திணைக்களம் இலங்கைக்கு முக்கியத்துவம் வாய்ந்த இரண்டு முக்கிய கனிப்பொருட் கண்டுபிடிப்புகளை அண்மைக் காலத்திற் செய்துள்ளது. அவை வருமாறு:

(1) எப்பாவலையில் அப்பற்றைற்றுப் படிவுகள்.
(2) சேருவிலையில் செப்பு, மக்னற்றைற்றுப் படிவு.

அப்பற்றைற்றுப் படிவுகள் கண்டு பிடிக்கப்பட்டதை அடுத்து இலங்கையில் பொசுபேற்றுக் கைத்தொழிலை ஆரம்பிக்கும் சாத்தியக்கூறு அநேகமாக நிச்சயமாகிவிட்டது. படிவு, சாசரியாக 30 சதவீத P_2O_5 அடக்கத்துடன் 5 கோடி தொன்னாக மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும் எப்பாவலை அப்பற்றைற்றில் கரைதிறன் குறைவாக உள்ளது. நியுனீசிய பொசுபேற்று கரைதிறனிலும் பார்க்க 40 சதவீதம் குறைவாக இருப்பதோடு நேர் உபயோகத்துக்குச் சிபாரிசு செய்யப்பட்ட அறக்குறைந்த பயனிலும் பார்க்க 20 சத வீதம் குறைவாக உள்ளது. இந்த அப்பற்றைற்றை நேரில் உரமாகப் பயன்படுத்த முயல்வது வீண் பண விரையத்தில் முடியும். அத்துடன் பயனுள்ள ஒரு வளமும் தீர்ந்து போகும். இரசாயன, கனிஜவியல் ஆய்வின் மூலம் அது புளூவோ காபனேற்று அப்பற்றைற்று என அறியப்பட்டுள்ளது. அதை மேல் அல்லது மும்மடி மேல் பொசுபேற்றாக மாற்றுவதற்கு சல்பூரிக் அமிலத்துடன் நலனுறுத்தித் தொழிற்படவிடுதல் அல்லது மகனீசிய சிலிக்கேற்றுடன் உருக்குவதன் மூலம் உருக்கிய மகனீசிய பொசுபேற்றாக மாற்றுதலே சாத்தியமான மாற்று வழிகள் ஆகும். உடவளவைப் பிரதேசத்தில் காணப்படும் உயர்ரக (மகனீசிய சிலிக்கேற்றுச்) சர்ப்பன்ரினைற்றை இந்த நோக்கத்துக்குப் பயன்படுத்த முடியும். இது தொடர்பில் செய்யப்பட்ட பரிசோதனைகள் ஊக்க மளிப்பனவாக உள்ளன. பொசுபேற்று உரங்களின்விலை அதிகரிப்புகளையும் எமது அப்பற்றைற்றின் சிக்கல் வாய்ந்த பண்பினையுங் கருத்துக் கொடுக்கும்போது இப்வப்பற்றைற்றை உரத்தினது திறன்மிக்க மூலமாக விருத்தி செய்வதற்கு, இலங்கைக்கு அனுகூலமான செய்முறையைப் பயன்படுத்தி, பரிசோதனைக் கூட, முன்னோடி அளவுகளில், மேலும் ஆய்வுகள் செய்யப்பட வேண்டுமென்பதும் அவற்றைத் தொடர்ந்து களப் பரிசோதனைகளும் நடாத்தப்பட வேண்டும் என்பதும் தெளிவாகிறது. சேருவிலையில் உள்ள செப்பு-மகனைற்று படிவே இலங்கையில் முதலாவது கண்டுபிடிக்கப்பட்ட எளிய உலோகமாகும். மொத்தக் கனிப்பொருட் பிரதேசத்தின் ஐந்தின் ஒரு பங்கில் இதுகாலும் செய்யப்பட்ட நுண்ணாய்வுகளின்படி 68,500 தொன் உலோகச் செப்பும் 66 இலட்சம் தொன் மக்னைற்றும் இரும்பாக கருதப்படுகிறது. செம்பு மக்னைற்று (இரும்பு) ஆகியவற்றின் தரம், அளவுகளைச் சரியாக மதிப்பிடுவதற்கு முழுக் கனிவளப் பிரதேசமும் அடங்கும் வண்ணம் மேலும் நிலவாய்வுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். உலோகப் பிரித்தெடுப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படுவதன் முன்னர் தாதுப் பொருளின் நலவுறுத்தல், சீரிடல் பற்றிய ஆய்வு விரிவாக மேற்கொள்ளப்படல் வேண்டும். மேலும் இப் படிவினில் இரும்பு, செப்பு அப்பற்றைற்றும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. படிவு பயன்படுத்தப்படும்போது அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும்.

நில ஆய்வு வேலையைத் துரிதப்படுத்தும் நோக்குடன் அரசாங்கம் விஸ்தரித்த நிலவாய்வு நிகழ்ச்சித் திட்ட தொடர்பில் அந்நிய தாபனம் ஒன்றுடன் உடன் படிக்கை ஒன்றைச் செய்துள்ளது. வெகு விரைவில் இப்படிவிலுள்ள செப்பு, மக்னைற்று, அப்பற்றைற்று ஆகிய வற்றினதும் பிற கனிப்பொருள்களதும் மொத்த அளவினை அறிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படும். அத்துடன் நாட்டுக்கு அனுகூலமான முறையில் அவற்றைச் சீரிடவும் முடியும்.

ஏனைய ஆசிய நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கை ஒரு சிறிய நாடாக இருப்பினும் அது தனது சொந்தக் கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு போதிய

கனிப்பொருள்களை குறிப்பாக கைத்தொழில்களுக்குரிய கனிப்பொருள்களை கொண்டுள்ளது என்பது மேற்போன்றவற்றிலிருந்து தெளிவாகிறது. இப்படிவுகளை அடிப்படையாகக் கொண்டு பல கைத்தொழில்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நில ஆய்வு வேலைகளைச் செய்து முடித்து சாத்தியவள ஆய்வுவேலைகளும் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் மேலும் பல கைத்தொழில்கள் தாபிக்கப்படும்.

கனிப் பொருட் படிவு வளங்கள் தீர்ந்து போகக் கூடியவையாகக் கருதப்படுகின்றன. உலகத்திலுள்ள வளமிக்க படிவுகள் தீர்ந்துள்ளன, அல்லது தீர்ந்து வருகின்றன என்பது இப்பேபது அறிந்த விடயமாகும் எதிர்கால உலோக, கனிப்பொருட் தேவைகளை படி முறையாகக் குறைந்த தரத்தினையுடைய பெரிய படிவுகளிலிருந்தே ஈடு செய்தல் வேண்டும். இத்தகைய சூழ்நிலையில் எமது கனிப்பொருள் வளங்களை உச்சப் பயன்பாட்டு முறையில் உபயோகிக்க வேண்டியது முக்கியமாகிறது. முன்னா குறிப்பிட்டவாறு சிரிடல் கனிப் பொருள்களின் பெறுமதியைப் பெருமளவு அதிகரிக்கிறது. பலரும் அறிந்த இன்னுமொரு அனுகூலம் என்னவெனில் சீரிட்ட கனிய மூலப் பொருள்களையும் அவற்றின் உப உற்பத்திப் பொருள்களையும் அடிப்படையாகக் கொண்டு இயலுமளவில் உள்ளூர்க் கைத் தொழில்களை ஆரம்பிப்பதாகும்.

அகழ்வு, கனிமக்கைத்தொழிலுக்கு இலங்கையில் நல்ல எதிர்காலம் உண்டு. எமது கனிப்பொருள்களின் மொத்தப் பெறுமானம் இப்போது ஆண்டொன்றுக்கு 40 கோடி ரூபா எனினும் இன்னும் தேடிக் கண்டு பிடிக்கப்படாது இருக்கும் கனிமப் படிவுகளின் நிறைவு திறனைக் கருத்துக் கெடுப்பின் பெறுமதி இத்தொகையின் அநேகமாக இரண்டு மடங்காக இருக்கும். எம்மிடம் வளங்களும் ஆள்வலுவும் உண்டு. இலங்கையில் தற்போது குறைவாக இருப்பது என்ன வெனில் எமது கனிப்பொருள்களின் அபிவிருத்தியில் எதிர் நோக்கப் படும் பிரச்சினைகளைக் கையாலவல்ல பயிற்றப்பட்ட கனிப்பொருட் தொழினுட்பவியலரும் உலோக இரசாயனவியலர்களும், இரசாயன எந்திரிகளும் ஆகும். இந்த நோக்கத்துக்கு அரசாங்கம், ஏனைய விருத்தியடைந்த நாடுகளில் உள்ளதைப் போன்று. எமது கனிம வளங்கள் பற்றிய ஆய்வு, அபிவிருத்தி வேலைகளைப் பொறுப் பேற்பதற்கும் கனிம மூலப் பொருள்களைப் பயன்படுத்துவதில் ஈடுபட்டுள்ள கூட்டுத்தாபனங்கள், பிறநிறுவனங்களுடன் இணைந்து தொழிற்படுவதற்குமென தனியொரு அமைப்பினைத் தாபிக்கும். சாத்தியக்கூறை ஆராய்தல் வேண்டும். அத்தகைய தாபனம் கனிப்பொருட் தொழினுட்பவியலர்களையும் இரசாயனவியலர்களையும் பயிற்றுவதற்கு உதவுவதோடு மட்டும் அமையாமல் தற்போது பச்சையாக ஏற்றுமதி செய்யப்படும் கனிப்பொருள்களை சீரிடுவதற்கான தொழினுட்பத்தை விருத்தி செய்வதற்கும் உதவ முடியும்.

ஏனைய நாடுகளில் நடைபெறுவது போன்று புதிய கனிப்பொருட் படிவங்களைத் தேடும் முயற்சி இலங்கையில் தொடர்ந்து நடைபெறுகிறது. எனினும், இப் படுவுகளைப் புத்தியாகவும் சிக்கனமாகவும் பயன்படுத்தும் பொருப்பு கைத்தொழில் அதிபர்களிடம் விடப் பட்டுள்ளது. உள்ளூர் மூலப் பொருள்களை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள் எவையாவது அவற்றில் பயன்படுத்தப்படும் மூலப் பொருள்களின் ஒதுக்கங்கள், ஆற்றல்களை முழுமையாகத் தெரிந்து அவற்றின் நடத்தையோடும் உபயோகத்தோடும் தொடர்புற்ற பிரச்சினைகளைத் தீர்க்காவிடின் முன்னேற்றங் காணமுடியாது. அப்போதுதான், இலங்கையில் கனிப் பொருட் கைத்தொழிலை எதிர்காலத்துக்கானவொரு பிரதான முன்னேற நிலைபெறுடைய கைத்தொழிலாக விருத்தி செய்யவும் கட்டியெழுப்பவும் முடியம்.

VIDUT 4 - 2/3 - 29

வாசனைத் திரவியங்களும் அவற்றிலிருந்து பெறப்படும் ஆவியாகும் எண்ணெய்களும்

ஏ. எல். ஜயவர்த்தன
ஆராய்ச்சி உத்தியோகத்தர்,
இயற்கைப் பொருட் பிரிவு,
இலங்கை விஞ்ஞான, கைத்தொழில்
ஆராய்ச்சி நிறுவகம்.

வாசனைத் திரவியங்கள் யாவும் முனைப்பான மணமும் குணமும் நிறைந்தவை. அவை உலர்ந்த பல்வகைத் தாவரப் பொருள்களாக உள்ளன. அவை இன்சுவை அகற்றப்படாத அல்லது செயற்கைச் சுவையோ நிறமோசேர்க்கப்படாத நறுமணமுள்ள தாவரங்களிலிருந்து பெறப்படுகின்றன. வாசனைத் திரவியங்கள், வாசனைத் தாவரத் தொகுதியுள் வரும் தாவரங்களுள் ஒன்றின் அல்லது பிறிதொன்றின் அனேகமாக எல்லாப் பகுதிகளிலுமிருந்து பெறப்படுகின்றன. உதாரணமாக கறுவாவும் ஆவரையும் பட்டைகள், இஞ்சியும் மஞ்சளும் நிலங்கீழ்த் தண்டுகள், காரம்பு மலர்மொட்டு, மிளகு சதையங்கள், சாதிக்காய்கள் விதைகள், ஏலம், மல்லி, சீரகம். சதகுப்பை, கரவேச்செடி (குடைப்பூச் செடிவகை) வெந்தயம் போன்ற முழுப் பழங்கள் முக்கிய வாசனைத் திரவியங்களாக அமைகின்றன. மேலும் புதினவரைக் கீரை சேஜ் பூண்டு (மணப்பூண்டு வகை) தைமேச்செடி (நறுமணக் கறியிலைச் செடிவகை) புன்னை ரோசுமேரிச் செடி (பசுமை மாரு நறுமண இலைச்செடி) போன்றவை செடிவகை வாசனைத் திரவியங்கள் ஆகும் அவை நறுமணமுள்ள தாவரங்கள் பலவற்றின் இலைகளாகவும் பசுத் தண்டுகளாகவும் அமைகின்றன.

மனிதன் வாசனைத் திரவியங்களைப் பயன்படுத்திய வரலாறு கவர்ச்சிகரமானது. அது பிரமித்துக் காலத்திலிருந்து ஆரம்பிக்கிறது. புராதன எகிப்தியர்கள் நறுமணப் பொருள்களையும் ஒப்பனைப் பொருள்களையும் தயாரிப்பதற்கு வாசனைத் திரவியங்களைப் பயன்படுத்தியுள்ளனர். குளிரூட்டு சாதனங்கள் புழக்கத்துக்கு வருவதற்கு முன்னர் ஐரோப்பியர்கள் தமது உணவுகளுக்கு சுவையும் மணமும் ஊட்டுவதற்காகவும் அவற்றிலுள்ள விரும்பத்தகாத மணத்தை மறைப்பதற்காகவும் கீழைத்தேய வாசனைத் திரவியங்களைப் பயன்படுத்தினர். அரசியல், பொருளாதார கௌரவத்தின் சின்னமாகக் கருதப்படுமளவுக்கு வாசனைத் திரவியங்கள் இன்றியமையாப் பொருள்களாக மாறின. நாடுகள் உயிர்களையும் செல்வங்களையும் பணயம் வைத்து அவற்றைத் தேடத் தலைப்பட்டன. அவற்றை உடைமையாக்குவதற்குப் பல யுத்தங்கள் நடாத்தப்பட்டன. வாசனைத் திரவியங்கள் காரணமாகப் பல 'புதிய' நாடுகளும் கண்டு பிடிக்கப்பட்டன. மத்திய காலத்தில் வாசனைத் திரவியங்கள் நாணயமாகவும் மாறின. இந்த நிலை நீண்ட காலம் தொடர்ந்து இருந்து வந்தது.

இலங்கையின் மிகப் பழைய ஏற்றுமதிப்பொருள் வாசனைத் திரவியமாகும். போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்து கறுவாவில் ஏகபோக உரிமை கொண்ட பின்னர் அதன் ஏற்மதி ஆரம்பிக்கப்பட்டது. ஒல்லாந்தரே உண்மையில் புராதன இலங்கையின் வாசனைத் திரவிய வர்த்தகத்தை ஒழுங்கமைத்தனர். அவர்கள் வேறும் பல வாசனைத் திரவியங்களை இலங்கைக்குக் கொண்டு வந்தனர்.

இலங்கையிற் கிடைக்கப்பெறும் வாசனைத் திரவியங்களை இரண்டு தொகுதிகளாகப் பிரிக்கலாம். முதலாவது தொகுதியில் இந்த நாட்டில் உற்பத்தியாகும் வாசனைத் திரவியங்கள் அடங்குகின்றன. இரண்டாவது தொகுதியில் எமது உணவுத் தயாரிப்புக்கு மிக முக்கியமான ஆனால் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறவாசனைத் திரவியங்கள் அடங்குகின்றன

தொகுதி i.	ஏலக்காய்
	கறுவா
	கராம்பு
	சாதிக்காய்
	மிளகு
	இஞ்சி
	மஞ்சள்
	கசுப்பிக்கம்/மிளகாய்
	கடுகு
தொகுதி ii	கொத்துமல்லி
	சீரகம்
	சதகுப்பை
	வெந்தயம்
	உள்ளி

முதலாவது தொகுதியில் உள்ளவற்றில் இந்த நாட்டில் மிக முக்கிய வாசனைத் திரவியமாக இருப்பது கறுவாவாகும் உலகத்துக்குத் தேவைப்படும் இலங்கை வகைக் கறுவாவின் ஐம்பது சதவீதத்துக்கும் அதிகமானதை நாம் உற்பத்தி செய்கிறோம். தூரக் கிழக்கிலும் சீனாவிலும் உற்பத்தி செய்யப்படும் சீனவகைக் கறுவா அல்லது கசியாவிலும் பார்க்க இங்கு உற்பத்தி செய்யப்படும் கறுவா தரத்திலும் சுவையிலும் சிறந்தது

பெருமளவில் ஏலக்காயை உற்பத்தி செய்யும் நாடாக இந்தியா விளங்குகிற போதிலும் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் ஏலக்காய்க்கே பிரதானமாக மத்தியகிழக்கில், நல்ல சந்தை வாய்ப்பு உள்ளது. இச் சற்சந்தை வாய்ப்பு படிப்படியாக விரிந்து வருகிறது. இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் வாசனைத் திரவியங்களில் ஏலக்காய் விலை உயர்ந்தது. இங்கு உற்பத்தி செய்யப்படும் ஏனைய வாசனைத் திரவியங்களில் கராம்பும் மிளகும் சாதிக்காயும் மட்டுமே சிறிய அளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன, இங்கு உற்பத்தியாகும் இஞ்சியும் மஞ்சளும் தரத்திற் குறைந்தவை. அவை ஏற்றுமதி செய்யப்படுவதில்லை. அவையும் வேறு பலவும் இங்கேவீட்டு உபயோகத்துக்கும் வாசனைத்திரவியப் பொருள்களைப் பெறுவதற்கும் பயன்படுத்தப்படுகின்றன.



மேலுள்ள விளக்கப்படம் வாசனைத் திரவியங்களும் வாசனைத் திரவிய உற்பத்திப் பொருள்களும் வர்த்தக ரீதியாகச் சந்தைப்படுத்தப்படும் வேறுபட்ட பல்வேறு முறைகளைக் காட்டுகிறது, இவற்றுள் முழுமையான வாசனைச் சரக்கும் வாசனைத் திரவிய அத்தியாவசிய எண்ணெய்யுமே இலங்கையிலிருந்து அதிக அளவில் வர்த்தகத்துக்காக அளிக்கப்படுகின்றன. ஏனைய வாசனைத் திரவியப் பொருள்களும் அதிக கிராக்கி உள்ளது இலங்கை, முதல் உற்பத்தியாளர் என்ற முறையில், இப்புதிய வாசனைத் திரவியப் பொருள்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவதற்கு உகந்த நிலையில் உள்ளது. இப்பொருள்களிற் சிலவற்றை உற்பத்தி செய்வதற்குப் பொறிச்சாதனத்துக்காக சார்பு முறையாக சிறு முதலீடு மட்டுமே தேவைப்படும். ஆனால், ஒலியோக்குங்கிலியம் போன்ற பொருள்களைப் பெரிய அளவில் உற்பத்திசெய்வதற்குச் சிக்கலான பொறிச்சாதனமும் தொழினுட்பங்களும் தேவை.

வாசனைத் திரவியங்களின் உயிர்ப்புள்ள கூறுகள் இருவகை உறுப்புக்களைக் கொண்டுள்ளன

அவை வருமாறு:

i. எளிதில் ஆவியாகும் உறுப்புக்கள்அவையே அத்தியாவசிய எண்ணெய்யாக அமைகின்றன

ii. எளிதில் ஆவியாகாத உயிர்ப்புள்ள உறுப்புக்கள் இவற்றில் நிறப்பொருள்கள். கார அல்லது உறைப்புத் தன்மை, பிசின், குங்கிலியம் கொழுப்புப் பொருள், மாப்பொருள், வெல்லம்; மெழுகு ஆகியன அடங்கும்

எனவே, ஆவியாகும் எண்ணெய் வாசனைத் திரவியத்தில் இன்சுவைப் பண்பின் ஒரு பகுதியை மட்டுமே கொண்டுள்ளது என்பதை அவதானித்துள்ளோம். அவை, வாசனைத்திரவியங்களின் ஆவியாகக் கூடிய, நறுமணம் நல்கும் கூறுகள் மட்டுமே. வாசனைத் திரவியங்களின் ஆவியாகும் உறுப்புகள், எல்லா ஆவியாகும் அத்தியாவசிய எண்ணெய்யும் பாரம்பரிய முறைகள் மூலம் பெறப்படுவதனால் வேருக்கப்படுகின்றன. இது ஆவி வடிப்புச் செய்முறை மூலம் செய்யப்படுகிறது. இச்செய்முறையில் மூலப்பொருள் பொருத்தமான ஒரு பாத்திரத்தில் வைக்கப்பட்டு ஆவியில் சூடேற்றப்படுகிறது. அப்போது எளிதில் ஆவியாகக்கூடிய பொருள் ஆவியாக்கப்பட்டு ஆவியுடன் எடுத்துச் செல்லப்பட்டு ஒடுக்கப்பட்டு வடித்த நீர்மப் பொருளிலிருந்து வேருக்கப்படுகிறது. அத்தியாவசிய எண்ணெய்யை வடிப்பதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணத்தில் ஆண்டுக்கணக்காக ஒரு சில முக்கிய மாற்றங்களே செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று வாலையையும் ஒடுக்கிகளையும் அமைப்பதற்கு துருப்பிடிக்காத உருக்கைப் பயன்படுத்துவதாகும். மற்றையது ஏலக்காய், கராம்பு மொட்டு, சாதிக்காய், மிளகு முதலியவை போன்ற வாசனைத் திரவியங்களை வடிப்பதற்குத் திருந்திய வாலை ஒன்று ஆக்கப் பட்டதாகும். இலங்கை விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவகத்தில் விருத்திசெய்யப்பட்டு CISIRILL SPICA என அழைக்கப்படும் இவ்வடித்தற கூறை மின்சாரத்தினால் இயக்கலாம் அல்லது கொதிகலனிலிருந்து ஆவியை எடுப்பதற்கு அல்லது எல். பி. வாயு மூலம் சூடேற்றுவதற்குத் திருத்தி அமைக்கலாம். பாரம்பரிய வாலையை விட இவ்வாலை மூலம் கிடைக்கும் அனுகூலம் என்னவெனில் நேரொத்த பயனைப் பெறுவதற்குக் குறுகிய காலம் எடுப்பதாகும்.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பெறுமதிமிக்க ஆவியாகும் எண்ணெய்களுள் ஏலக்காய் எண்ணெய்யும் ஒன்று. அது 1.8 சினியோலையும் 'ய' தேப்பினில் அசெற்றேயையும் பிரதான கூறுகளாகக் கொண்டுள்ளது. இவ்வெண்ணெய் உணவுக் கைத்தொழிலிலும் மருந்தாக்கக் கைத்தொழிலிலும் சுவையூட்டு கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது.

கறுவாப்பட்டை எண்ணெய் பெருமளவு சினமலுத் தெகயித்தையும் பெருந்தொகையான சிறு கூறுகளையுங் கொண்டுள்ளது.. உணவுக் கைத்தொழில் முக்கிய ஒன்றாகக் கருதப்படும் இன்சுவையும் அதில் உண்டு.

கராம்பு மொட்டு எண்ணெய்யில் ஊசினோலும் ஊசினிலே அசெத்தேத்தும் பிரதான கூறுகளாக உள்ளன. சாதிக்காய், மிளகு எண்ணெய்களில் தொடரான தேபீன் ஐதரோக் காபன் சேர்வைகள் உள்ளன. அவற்றுள் ள 'B' பினீன், பினின, சபினீன், பெலன்திரீன் தேப்பினீன், இலிமொனீன் ஆகியவை காணப்படுகின்றன. இஞ்சி சிறிய அளவில் மட்டுமே வடிக்கப்படுகிறது. அதன் அத்தியாவசிய எண்ணெய்யில் சிஞ்சிபெரின், குர்குமீன், ஆகியவை பிரதான உறுப்புகளாக உள்ளன. இஞ்சி எண்ணெய் உணவுக் கைத்தொழில், மருந்தாக்கக் கைத்தொழில் ஆகிய இரண்டிலும் பெறுமதிமிக்க பொருளாகவும் பயன்படுத்தப்படுகிறது.

ஆவியாகத்தக்க இன்சுவை நிர்மங்களைத் தவிர வாசனைத் திரவியத்தின் ஏனைய சுவைகள் உயிர்ப்பு உறுப்புகளின் ஆவியாகப் பகுதிகளில் உள்ளன. குங்கிலியமானது, முக்கிய வாசனை உற்பத்திப் பொருள் இது கரையச் சுவடுகள் முழுமையும் நீக்கப்பட்ட புதிய மாவவை வாசனைப் பொருளின் மொத்தக கரைய உறைசத்து என விளக்கப்பட்டுள்ளது. இது பொதுவாக ஓரளவு திண்மமான அல்லது தடிப்பான, கரு நிறங்கொண்ட, எண்ணெய்த் தன்மை வாய்ந்த, திரவம் ஆகும். ஒலியோக் குங்கிலியங்கள் மூல வாசனைத் திரவியங்களின் சுவைத்தன்மை அனைத்தையும் கொண்டுள்ளன. இதனால் அறியப்படுவது என்னவெனில் ஒலியோக் குங்கிலியம் ஆவியாகத்தக்க எண்ணெய்யுடன் உயிர்ப்புள்ள ஆவியாக உறுப்புகள் அனைத்தையுங் கொண்டுள்ளது என்பதாகும். எனவே ஒலியோக் குங்கிலியங்கள் அரைத்த முழுமையான வாசனைத் திரவியங்களுக்கு, வாசனைத் திரவிய அத்தியாவசிய எண்ணெய்யை விடச் சிறந்த பிரதியீட்டுப் பொருள்களாக அமைகின்றன.

ஒலியோக் குங்கிலியங்கள் வாசனைத் திரவியங்களுக்கு மேலாக சில அனுகூலங்களைக் கொண்டுள்ளன அவற்றில் நுண்ணுயிர்கள், கிருமிகள் இல்லை. அதனால் அவை சுகாதாரத் தரத்தில் உயர்ந்தவை. பெரிய அளவிலான உணவு உற்பத்திக்கு முக்கியமாகும் சுவைச் செறிவு நோக்கில் அவற்றைத் தரப்படுத்த முடியும்; அவற்றில் நஞ்சு எதிரிகள் இயற்கையாக உள்ளன. ஆனால் உயிர்ப்பு நொதியங்கள் இல்லை. எனவே அவை நீடித்து நிலைக்கக்கூடியவை. மிளகாயிலிருந்து ஒலியோக் குங்கிலியத்தைத் தயாரிப்பதற்கு இலங்கை விஞ்ஞான ஞான, கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவகத்தில் சில வருடங்களுக்கு முன்னர் முயற்சி எடுக்கப்பட்டது ஆனால் அவ்வேலை இன்னும் பூர்த்தியடையவில்லை. நல்ல தரமான ஒலியோக் குங்கிலியங்கள் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்டால் அவற்றுக்கு நல்ல விற்பனை வாய்ப்பு இருக்கும். வாசனைத் திரவியங்களான இஞ்சி, மஞ்சள் ஆகிய இரண்டும் அவற்றின் குறைவான தரமும் தோற்றமும் காரணமாக வெளி நாடுகளில் சந்தை வாய்ப்பைப் பெற முடியவில்லை. அவற்றை ஒலியோக் குங்கிலிய உற்பத்திக்குப் பயன்படுத்தினால் நல்ல சந்தை வாய்ப்பைப் பெறமுடியும். தற்போது இலங்கையில் சிறு அளவில் இஞ்சி, மிளகு ஒலியோக் குங்கிலியங்கள் உற்பத்தி செய்யப் படுகின்றன. அவை உணவு உற்பத்திக் கைத்தொழிலில் இங்கேயே பயன்படுத்தப்படுகின்றன.

எளிய உலர்த்தல், பிரித்தல் உத்திகளைக் கையாண்டு ஒலியோக் குங்கிலியங்களிலிருந்து பிரிக்கப்பெற்ற வாசனைத் திரவியங்களும் வில்லையுறையிட்ட வாசனைத் திரவியங்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. பெரிய் ஒலியோக்குங்குலிய உற்பத்திக் கூறு கிடைக்கப் பெற்றதும் இந்த உத்திமை மாற்றிப் பய்ன்படுத்த முடியும்

VIDUT4-2/3-31

அட்டவணை II

இலங்கையில் இயற்கைக் காடுகளும் வனவிலங்கு ஒதுக்கங்களும்

பரப்பளவு கெக்ரரில்

வகுதி	1975	1976	1977
பிரகடனப் படுத்தப் பட்ட ஒதுக்கங்கள்	4,70,774	470,955	4,70,183
உத்தேச ஒதுக்கங்கள்	482,826	4,82,799	482,825
பிற அரசாங்க காடுகள்	17,62,753	8,09,717	8,09,717
தேசிய பூங்காக்கள்	3,04.557	304,557	304,570
இடைநிலை வலயங்கள்	36,092	36,092	36,092
இயற்கை ஒதுக்கங்கள்	55,517	44,841	63,914
காட்டுப் போக்குவழிகள்	10,517	10,517	10,364
காப்பிடங்கள்	1,99,928	1,99,928	2,05,222

கடந்த காலத்தில் இயற்கைக் காடுகள் பெருமளவில் பயன்படுத்தப்பட்டதனால் காடுகள் விரைவாக அழிக்கப்படலாயிற்று. அதைத் தொடர்ந்து செய்ய முடியாத கட்டம் இப்போது வந்துவிட்டது. (வனராசி ஒதுக்கிடங்கள் உட்பட இயற்கைக் காடுகளின் தற்போதைய பரப்பளவு அட்டவணை II ல் தரப்பட்டுள்ளது) இந்த நிலை இயற்கைக் காடுகளிலிருந்து மரம் வழங்கும். பொறுப்பை மனிதனுக்கிய அல்லது நடுகைக் காடுகளுக்கு மாற்றியுள்ளது.

மனிதனுக்கிய காடுகள் 20 கெக்ரர் நிலப்பரப்பில் தேக்கு நடுகை செய்து 1880 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. காட்டுத் திணைக்களத்தின் அயராத உழைப்பினால் நடுகைக் காடுகளின் பரப்பளவு விரைவாக அதிகரித்தது. 1976 இல் நடுகைக் காடுகளின் விஸ்தீரணம் 1, 1, 348 கெக்ரராக இருந்தது. அவற்றில் பலவேறு இன மரங்களும், பிரதானமாக தேக்கு. (தெக்ரோனு கிராத்திசு) நாட்டப்பட்டுள்ளன.

தற்போது ஆண்டொன்றுக்கு 8000 கெக்ரார் (2000 ஏக்கர்) வீதத்தில் காட்டு மீள்நடுகை நடைபெறுகிறது இதன்படி கி.பி. 2000 ஆண்டளவில் 30.0000 கெக்ரா நிலப்பரப்பில் (7 இலட்சத்து 50 ஆயிரம் ஏக்கர்) அல்லது மொத்த நிலப்பரப்பின் 46 சத வீதத்தில் காட்டு மீள்நடுகை பூர்த்தியாகிவிடும் உலர் வலய காட்டுப் புனர்நடுகையில் பயன்படுத்தப்படும் பிரதான இனங்கள் தேக்கும் இயுக்கலிப்தசும் ஆகும். இடைநிலை வலயத்தில் பிரதானமாக மலைவேம்பு நடப்படுகிறது. மேற்கு மொன்தானு வலயங்களில் பினிசு, இயுக்கலிப்தசு போன்ற இனங்கள் பெருமளவில் நடப்படுகின்றன உலர் வலயத்தில் அண்மையில் அறிமுகஞ் செய்யப்பட்ட இன்னொரு இனம் இப்பில்-இப்பில் ஆகும், குறிப்பிடப்பட்ட இவ்வினங்கள் யாவும் பிறநாட்டுக்குரியவை; வெகு விரைவாக வளரக்கூடியவை, பிறநாட்டு இனங்களைப் போல விரைவாக வளராத சுதேச இனங்களும் மட்டுப்படுத்தப்பட்ட விஸ்தீரணத்தில் நாட்டப்பட்டுள்ளன.

அட்டவணை iii

தோட்டங்களின் பதிவேடு

இனங்கள்	78 12-31 இல் பரப்பளவு (ஏக்கர்)
தேக்கு	161, 386
இயுக்கலிப்தசு	30, 897
பலா/கருங்காலி	11, 910
பலா	10
மலைவேம்பு கோட்டு நடுகை	45, 802
தெதுன்-கோட்டு நடுகை	102
இலகு உள்வயிரமரம்	4, 777
மூங்கில்	2756
பினுசு	27, 758
சைப்பிரசு/பினுசு	1, 981
புளி	49
அரவுக்கேரியா கன்னிங்கம்	29
அலிசுத்தொர்னியா	45
சவுக்குமரம்	505
உலன்கிக்கு	84
நெதுன்	200
மில்ல	9
கும்புக்கு	49
எத்து-தெமாத்தா	295
கருங்காலி/கல்மில்ல	10
ஆங்கேசியா ரொல்லிசியா	3
[illegible]	[illegible]
குதும்பெரியா	14
முஸ்கில்/இயுக்கலிப்தசு	888
தூனு- கோட்டு நடுகை	35
கல்லீரிசு	5
வேம்பு	422
கல்மில்ல	37
கலப்பினங்கள்	3' 7

ஒவ்வொரு இனமும் தொடர்பில் நடுகைக்காடுகள் பற்றிய பதிவினை அட்டவணை III ஏங்கரில் தருகிறது

இலங்கை நடுகைக் காடுகள், அரச மரக் கூட்டுத்தாபனத்தின் உயர் ரகக் கூற்றில் பிரதிபலிப்புற்றவாறு, கட்டளை வாய்ந்த முதல் தர மரத்தை உற்பத்தி செய்கிறது. 1974 இன் மொத்த விற்பனையான 5 கோடி 40 இலட்சத்தில் நடுகை மர உற்பத்தி 1 கோடியே 30 இலட்சம் ரூபா அளவினதாக விளங்கியது. நடுகைக் காடுகளின் படிமுறை முதிர்ச்சியை அடுத்து இப்பங்களிப்பு மேலோங்கும் என நம்பலாம்.

நடுகை செய்யப்பட்ட இனங்களுள் தேக்கு மிக உயர்வான சமூக—பொருளியல் பயனைத் தருகின்றது. தேக்கு மரத் தோட்டங்களின் அளவிடமுடியாத மூலதனப் பெறுமதியை, ஐம்பது வருடச் சுழல் ஒன்றில், ஆகக் குறைந்த மதிப்பீட்டில், அது கிட்டத்தட்ட ரூபா 100000/கெக்ரா பெறுமதியானது என்ற உண்மையை வைத்து அளக்கமுடியும்.

மகாவலி அபிவிருத்தித் திட்டமே—அதன் பரிமாணம் நோக்கெல்லை ஆகியவற்றின்படி-இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மிகப் பெரிய அபிவிருத்தித் திட்டமாகும் இத்திட்டத்திலிருந்து பெறக்கூடிய பயன்களை ஆகக்கூடிய அளவுக்கு அதிகரிப்பதற்கும் பேணுவதற்கும் தேவையான இடுகைப்பொருளாக காட்டுத் துறையின் முழுமையான முக்கியத்துவம் ஏற்கப்பட்டுள்ளது. நீர்பாசன, நீர்மின்மசாரத் திட்டமொன்றின் வரலாற்றில் இவ்வாறு ஏற்கப்பட்டமை இதுவே முதன் முறையாகும். மகாவலி அபிவிருத்தித் திட்டம் 650,000 ஏக்கர் காட்டுநிலத்தை நீர்பாசனக் கமநிலமாக மாற்றுவதற்கும் 500 மெ. வா. நீர்மின்சாரத்தை நீர்ப்பாசனத்தை உற்பத்தி செய்வதற்கும் கமத்தை அடிப்படையாகக்கொண்ட கைத்தொழில்களை அமைப்பதற்கும் 500,000 குடும்பங்களைக் குடியேற்றுவதற்கும் முற்படுகிறது.

அட்டவணை IV

1956 இல் இருந்தவாறான
மகாவலிகங்கை வடிநிலக் காட்டு வளங்கள்

	காடு	மொத்தம்
சுரலிப்பு வலயம்	138,180	736, 540
இடைநிலை வலயம்	1,11,550	5,51. 200
உலர் வலயம்	8, 81, 460	12,86, 970
மொத்தம்	13,31, 190	25,74,710

மகாவலி கங்கையின் மேல் நிரேந்து பிரதேசத்தில் காடுகளின் உள்ளார்ந்த முக்கியத்துவம் நீரொட்டத்தை ஒழுங்குறுத்தல், நிலத்தில் நீரின் ஆழ் சேமிப்பை அதிகரித்தல், வெள்ளப்பெருக்கு, அரிமானம் ஆகியவற்றைக் குறைத்தல், நீரின் தூய்மையை அதிகரித்தல் என்பவற்றுடன் தொடர்புடையது. என்பதில் ஐயமில்லை ஆதலின், மகாவலிப்பாதை நெடுகிலும் ஆற்றங்கரைகளிலும் அருவிக்கரைகளிலும் அவற்றின் ஒதுக்கிடங்களிலும், இயற்கையாகவும்சரி நடுகைபண்ணியுஞ் சரி, தாவர இன வளர்ச்சியை தடையின்றிப் பேணுவது மிக மிக அவசியமாகும்.

பேரண்டக்காலநிலை காட்டினுல் பாதிக்கபடாத போதிலும் நுண்காலநிலை காட்டினுல் பெருமளவு பாதிக்கப்படுகிறது. ஆதலின், மகாவலியின் கீழ்ப் பிரதேசத்தில் காடுகளின் பெரும் பகுதிகளை அகற்றுவது தாவர, விலங்கினங்களின் வாழ்க்கைக்குத் தீங்கான பாதிப்பை ஏற்படுத்தும் எனவே, காட்டுத்துறையை ஒருங்கிணைத்து, பகுத்தறிவு சார்ந்த ஒரு நீண்ட கால அடிப்படையில், காணியைப் பல நோக்கங்களுக்குப் பயன்படுத்துவது மிக மிக முக்கியமாகும்.